யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை (2) – 2020

தரம் - 12 (2021) | உயிரியல்

பெயர் / சுட்டெண் : ..... திரு.ம.யாழினி B.Sc (Hons), PGDE

அறிவுறுத்தல்கள் :

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

கட்டுரை வினாக்கள்

1.

a. விலங்குகளிடையே காணப்படுகின்ற வெவ்வேறு ஊட்டல் பொறிமுறைகளை உதாரணம் தந்து விளக்குக.

b. மனித இரைப்பை மற்றும் சிறுகுடல் என்பனவற்றில் நடைபெறும் சமிபாட்டுச்செயன்முறைகள் இரண்டையும் தொடர்புபடுத்தி விபரிக்க.

2.

c. இதயத்தில் மின்னியல் சமிக்ஞைகள் பரவுகையின் தொடர் நிகழ்வுகளை விபரிக்க.

d. மனிதனில் அதிபர நிலைமைக்குரிய அபாயக்காரணிகளை குறிப்பிடுக.

e. மனிதனில் அத்திரோஸ்கிளரோசிஸ் நிலைமைகளின் பாதிப்புகளை விளக்குக.

3.

f. உணவின் கூறுகளின் தொழிற்பாடுகளை விளக்குக

g. 1) ஆரோக்கியமான உணவில் உள்ளடங்கியிருக்கும் கனியுப்பு வகைகளைக் குறிப்பிட்டு அவற்றின் குறைபாட்டு அறிகுறிகளைத் தருக.
2) விலங்கு ஒன்றினது சக்திப்பாதீட்டினை கற்பதன் நோக்கம் பற்றி குறிப்பிடுக.

4.

h. சுவாசப்பாதையின் கட்டமைப்பு சிறப்பியல்புகளை அதனது தொழிலுடன் தொடர்புபடுத்தி விபரிக்குக.

i. புகைத்தல் ஆரோக்கியமான சுவாசத்தொகுதியை பாதிப்பதனை சுருக்கமாக விளக்குக.

5.

j. உயர் விலங்குகளில் குருதிச்சுற்றோட்டத்தொகுதி விருத்தியடைந்தமைக்கான நோக்கத்தை விளக்குக.

k. 1) மனிதக்குருதியில் சுவாச வாயுக்களின் கொண்டுசெல்லுகையை விபரிக்குக.
2) குருதி உறைதற் செயற்பாட்டினைச் சுருக்கமாக விளக்குக.

www.ikedu.lk

6. மனிதனில் உள்ள விசேட வகையாக கருதப்படும் தொடுப்பிழையத்தின் கூறுகளை அதனது தொழிலுடன் தொடர்புபடுத்தி விபரிக்குக.

7.

a. மனித நிணநீர்த் தொகுதி, குருதிச்சுற்றோட்டத்தொகுதியுடன் எவ்வாறு நெருக்கமான தொடர்பைக் காட்டுகிறது என விளக்குக.
b. மனிதனில் குருதி மாற்றீட்டுச்செயன்முறையிலுள்ள அடிப்படை எண்ணக்கருவை சுருக்கமாக விளக்குக.

8.

c. உள்ளார்ந்த நிர்ப்பீடனம் பற்றி குறிப்பிடுக.
d. உள்ளார்ந்த நிர்ப்பீடன உள்ளான தடைப்பாதுகாப்பு பற்றி விபரிக்குக.

சிறுகுறிப்பு எழுதுக.

9)

ய. Rhesus தொகுதி.
டி. தசையிழையங்கள்.
உ. சமப்படுத்தப்பட்ட உணவு

10)

ய. குருதி அமுக்கம்
டி. சமிபாட்டுச்சீராக்கம்
உ. ECG.

www.lkedu.lk